# யூசுஃப் நபியும் இறைச்சட்டமும்

கி. அன்ஸார், சென்னை.

இஸ்லாமிய ஆட்சிக்குட்படாத ஏனைய நாடுகளில் வாழும் முஸ்லிம்கள் தங்கள் நாட்டு ஆட்சியாளருக்கு கட்டுப்பட்டு நடக்கவேண்டும். மேம் அந்நாட்டின் சட்டங்களை செயல்படுத்துவதோடு ஆட்சியில் (எவ்வகை ஆட்சியாயினும்) பங்கு பெறலாம். அதற்கு முன்னுதாரணமாக யூசுஃப்(அலை) விளங்கினார்கள் என்பதாக பி.ஜே. பேசி வருகிறார். அவரது திருகுர்குர்ஆன் மொழிபெயர்ப்பிம் இக்குறிப்பு இடம் பெற்றுள்ளது. அல்லாஹ்வின் சட்டங்களை பின்பற்ற வேண்டும் என்பதாக வலியுறுத்தும் வசனங்களை அதற்கான ஆட்சி அதிகாரம் கிடைக்கும் போது செயல்படுத்த வேண்டியவை என்றும் குறிப்பிடுகிறார். (பக்கம் 1121, குறிப்பு 237)

தான் அரசியல் நடத்திய (தமுமுக), தற்போது அரசியல் நடத்துகின்ற (த.நா.த.ஜ) இயக்கங்களுக்கு ஆதாரம் தெரிவிக்கவே, அல்லாஹ்வின் தூதராக இருந்த யூசுஃப்(அலை) எவ்வித நிர்ப்பந்தமுமின்றி தான் விரும்பியவாறு அதிகாரத்தில் இருந்ததோடு இறைச்சட்டத்தையே நடைமுறைப்படுத்தினார் என்பதை 'யூசுஃப்' என்ற பன்னிரண்டாவது அத்தியாயத்தை முழுமையாக படித்தவர்கள் விளங்கிக் கொள்வார்கள். மனோ இச்சையின் அடிப்படையில் ஆய்வு மேற்கொள்பவர்களுக்கு எதிர் மறையான முடிவே கிடைக்கும். அல்லாஹ்வின் எச்சரிக்கையை அவர்களுக்கு சமர்ப்பிக்கிறோம்.

**"எவர்கள் அல்லாஹ் இறக்கி வைத்ததைக் கொண்டு தீர்ப்பளிக்கவில்லையோ, அவர்கள் நிச்சயமாக காஃபிர்கள்".** ***அல்குர்ஆன் 5:44***

**"எவர்கள் அல்லாஹ் இறக்கி வைத்ததைக் கொண்டு தீர்ப்பளிக்கவில்லையோ அவர்கள் நிச்சயமாக அநியாயக்காரர்கள்."** ***அல்குர்ஆன் 5:45***

**"எவர்கள் அல்லாஹ் இறக்கி வைத்ததைக் கொண்டு தீர்ப்பளிக்கவில்லையோ அவர்கள் நிச்சயமாக பாவிகளாவார்கள்".** ***அல்குர்ஆன் 5:45***

**"இன்னும் அல்லாஹ் இறக்கியதைக் கொண்டே அவர்களுக்கிடையில் தீர்ப்பு**

**செய்வீராக; அவர்களுடைய மனோ இச்சைகளைப் பின்பற்றாதீர்கள்".** ***அல்குர்ஆன் 5:48,49***

**"(நபியே!) உம்மீது இறக்கப்பட்டதையும், உமக்கு முன்னால் இறக்கப்பட்டதையும் நம்புவதாக வாதித்துக் கொண்டிருப்போரை நீர் பார்க்கவில்லையா (எந்த ஷைத்தானை) நிராகரிக்கவேண்டும் என்று அவர்களுக்கு கட்டளை இடப்பட்டிருக்கிறதோ அந்த ஷைத்தானை (தாகூத்தை) தீர்ப்புக் கூறுபவனாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென விரும்புகிறார்கள். அந்த ஷைத்தானோ அவர்களை வெகு தூரமான வழிகேட்டில் தள்ளிவிட விரும்புகிறான்".** ***அல்குர்ஆன் 4:60***

**"நன்மையிம் இறையச்சத்திம் ஒருவருக் கொருவர் உதவி செய்து கொள்ளுங்கள்; பாவத்திம், பகைமையிம் ஒருவருக் கொருவர் உதவி செய்து கொள்ள வேண்டாம்".** ***அல்குர்ஆன் 5:2***

**“எவரேனும் ஒரு நன்மையான காரியத்திற்கு பரிந்துரை செய்தால், அதில் ஒரு பங்கு (நன்மை) அவருக்கு உண்டு; எவரேனும் ஒரு தீமையான காரியத்திற்கு பரிந்துரை செய்தால்; அதில் ஒரு பங்கு (தீமை) அவருக்கு உண்டு”.** ***அல்குர்ஆன் 4:85***

மேம் அரசியல் என்ற தலைப்பில் சில ஆபத்தான குறிப்புகளை புனைந்துள்ளார் (குர்ஆன் மொழிபெயர்ப்பு பக்கம் 1324)

1. ஆட்சிமைப்பது நபியின் வேலையல்ல (12:55 வசனத்தை ஆதாரமாக குறிப்பிட்டுள்ளார்).

2. நிரபராதியை ஆட்சியை அடைத்த ஆட்சியாயினும் அந்த ஆட்சியில் பதவியைப் பெறலாம் (12:55 வசனம்).

3. முஸ்லிம் அல்லாதவரின் ஆட்சியில் பதவி வகித்தல் (12:55 வசனம்).

4. இறைத்தூதர் முஸ்லிமல்லாதவரின் ஆட்சியில் பதவி வகித்தல் (12:55 வசனத்தையே குறிப்பிடுகிறார்).

5. இறைத்தூதர் அல்லாதவரின் சட்டங்களை இறைத்தூதர் அமுல்படுத்தல் (12:76 வசனம்)

6. அந்நிய நாட்டியவர் விரும்பினால் அவரது நாட்டுச் சட்டத்தை அவருக்கு அமுல்படுத்துதல் (12:75,76 வசனம்)

மேற்கண்ட வசனங்களைப் புரட்டிப் பார்த்தால் கற்பனை எந்த அளவிற்கு அவரை மயக்கியுள்ளது என்பதை விளங்கமுடியம். முந்தைய நபிமார்களின் நடைமுறைகளை நாம் பின்பற்றலாமா? என்று கேள்வி எழுப்பினால், அல்லாஹ் யூசுஃப்(அலை) அவர்களின் வரலாற்றை அழகிய வரலாறு என்று குறிப்பிடுவதால் தாராளமாக பொருந்தும் என கூறிவருகிறார். ஆனால் அவரது திருகுர்ஆன் மொழிபெயர்ப்பில் (பக்கம் 1175, குறிப்பு 326) ‘முந்தைய சமுதாயத்திற்கு அனுமதிக்கப்பட்டவை இறைவனாலோ; இறைத்தூதராலோ மாற்றி அமைக்கப்படாவிட்டால் மட்டுமே நாம் அவற்றை கடைபிடிக்க வேண்டும் என்பதாக முரண்பட்டு எழுதியுள்ள ார். யூசுஃப்(அலை) அவர்களின் நடைமுறையை நாம் பின்பற்றலாம் என்று எடுத்துக் கொண்டாம், இவரது நவீன இஜ்திஹாதின் அடிப்படையில் யூசுஃப்(அலை) அவர்கள் இருக்கவில்லை என்பது சிந்திப்பவர்களுக்கே விளங்கும். அவரது ஆதரவாளர்களுக்கு (அவரை தக்லீது செய்வதால்) விளங்க வாய்ப்பில்லை.

யூசுஃப்(அலை) முஸ்லிமல்லாதவரின் ஆட்சியில் அமைச்சராக இருந்தார் என்பது இவருக்கு எப்படி தெரியும்? எகிப்து மன்னர் இணை வைப்பாளராக இருந்தால் என்பது எந்த ஆதாரத்தின் அடிப்படையில் என்பதை அவர் விளக்கியாக வேண்டும். யூசுஃப்(அலை) அவர்களுடன் சிறையில் இருந்த வாலிபர்கள், தாங்கள் கண் ட கனவின் விளக்கத்தை கோரியபோது; கனவின் விளக்கத்தைக் கூறுவதற்கு முன்னர் ஏகத்துவ அழைப்பை விடுத்த பின்னரே கனவின் விளக்கத்தை கூறினார். (12:39,40). மேம் அந்த உணவு இடைவேளை நேரத்தை ஏகத்துவ அழைப்பிற்காக செலவிட்டார்கள் (12:37) தனக்கு கிடைத்த சொற்ப நேரவாய்ப்பை பயன்படுத்திய யூசுஃப்(அலை) நீண்ட காலம் எகிப்திய மன்னருடன் இருந்தும் பயன்ப டுத்தவில்லை என்று கூற விரும்புகிறாரா? அல்லாஹ்வின் சட்டத்தை அமுல்படுத்தாமல் முஸ்லிம் அல்லாத ஆட்சியாளரின் சட்டங்களை (குஃப்ர் சட்டங்கள்) அமுல்படுத்தினார் என்பது விதண்டாவாதமாகும்.

நிரபராதியான யூசுஃப்(அலை) அவர்களை அநியாயமாக சிறைச்சாலைக்கு மன்னர் அனுப்பி வைத்தார் என்பதும் தவறாகும். அநியாயமாக யூசுஃப்(அலை) அவர்களை அடைய முயன்றும், இறுதியில் தோல்வியை தழுவிய அஜீஸின் மனைவியிடமிருந்து தன்னை தற்காத்துக் கொள்ளவே யூசுஃப்(அலை) சிறைச்சாலையை விரும்பினார். அல்லாஹ்வின் ஏற்பாடாகவும் அமைந்திருந்தது.

**"என் இறைவனே! அவர்கள் அழைக்கும் (தீய)காரியத்தை விட சிறைச்சாலையே எனக்கு அதிக விருப்பமுடையதாகும். இவர்களின் சதியை விட்டு நீ என்னை காப்பாற்றவில்லையானால், நான் இவர்களின்பால் சாய்ந்து (பாவத்தால்) அறிவில்லாதவர்களில் ஒருவனாகி விடுவேன் என்று (பிரார்த்தித்தவராக) கூறினார்.**

**எனவே அவருடைய பிரார்த்தனையை இறைவன் ஏற்றுக்கொண்டான். அப்பெண்களுடைய சதியை அவரை விட்டு நீக்கி விட்டான். நிச்சயமாக அவன் (யாவற்றையும்) கேட்பவனாகவும், நன்கறிபவனாகவும் இருக்கிறான்"** ***அல்குர்ஆன் 12:33,34***

யூசுஃப்(அலை) அவர்களின் பிரார்த்தனையின் பலனே அவரை அவர்கள் சிறையிலடைக்க தோன்றியது (12:35). நிரபராதியான யூசுஃப் அநியாயமாக சிறையிலடைத்தனர். எனவே அப்படிப்பட்டவர்களிடமும் பதவியைக் கேட்டு பெறலாம் என்று சட்டம் எடுக்க முடியுமா? அநியாயக்காரர்களிடம் பதவியைக் கேட்டுப் பெறலாம் என்றால் நரேந்திர மோடியிடமும், அமெரிக்க அதிபரிடமும் அமைச்சர் பதவியை கேட்டுப்பெற முடியுமா? சிந்திக்கவேண்டும்.

**"பூமியின் களஞ்சியங்களுக்கு என்னை (அதிகாரியாக) ஆக்கிவிடுங்கள்; நான் அவற்றை பாதுகாக்க நன்கறிந்தவன்".** ***அல்குர்ஆன் 12:55***

என்பதாக யூசுஃப்(அலை) அவர்கள் கோரியது பதவியை பெறவேண்டும் என்ற நோக்கில் அல்ல. அந்த நாட்டில் ஏற்பட்ட பஞ்சத்தை உணவு தானியத்தை சேமித்து வைத்து பின்னர் அதை சீரிய முறையில் விநியோகித்து அதன் மூலம் நன்மை செய்யவே ஆகும். இதை விடுத்து

யூசுஃப்(அலை) பதவியைக் கேட்டிருக்கிறார்; எனவே நாமும் அரசிடம் பதவியை கேட்டுப் பெறலாம் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. யூசுஃப் அந்நாட்டில் விரும்பிய விதத்தில் காரியங்கள் செய்துவர நாம் அவருக்கு வாய்ப்பை இவ்வாறு ஏற்படுத்திக் கொடுத்தோம் (12:56) என்று கூறப்பட்டிருப்பது சான்றாகும். முஸ்லிமல்லாதவரின் ஆட்சியில் பதவியை கேட்டுப்பெற்றார் என்று கூறுவது பதவியை அடைய முனைவர்களின் கூற்றாகத்தானிருக்கும்.

**"அல்லாஹ் நாடினாலன்றி அவர் தம் சகோதரரை தன்னுடன் வைத்துக்கொள்ள மன்னரின் சட்டப்படி இயலாமலிருந்தார்"** என்று மொழிபெயர்ப்பதை விட; (12:76) மன்னரின் சட்டப்படி எடுத்துக்கொள்ள விரும்பமில்லாமலிருந்தார் என்று மொழி பெயர்ப்பதே பொருத்தமாகும் (**IFT** திருகுர்ஆன் மொழி பெயர்ப்பு). "யூசுஃப்(அலை) விரும்பியவாறு காரியங்கள் செய்துவர அந்நாட்டில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தோம் என்று (12:56) அல்லாஹ் கூறியிருப்பது சான்றாகும். யூசுஃப்(அலை) விரும்பியவாறு அந்நாட்டில் காரியங்கள் செய்துவர வாய்ப்பை பெற்றிருந்தும் மன்னரின் சட்டப்படி நடந்து வந்தார் என்று கூறுவது கற்பனையாகும்.

தனது சகோதரரை தன்னுடன் வைத்துக்கொள்ள யாகூப் நபியின் ஷரீஅத்தை யூசுஃப் நபியவர்கள் பயன்படுத்தியிருக்க, (இதுவே இப்ராஹீம்(அலை) அவர்களின் ஷரீஅத் என்பது அறிஞர்களின் கருத்து; சான்று 12:28 வசனம்) இறைத்தூதர் அல்லாதவரின் சட்டத்தையும் (குஃப்ர் சட்டம்) யூசுஃப்(அலை) நடைமுறைப்படுத்தினார் (பக்கம் 1324) என்பது நபிமார்கள்மீது கூறப்படும் வசைமொழியாகும். அரசியலில் நுழைவதற்கும், இயக்கம் நடத்துவதற்கும் ஆதாரம் காட்டவே "இறைத்தூதர் அல்லாதவரின் சட்டங்களை (மனிதச்சட்டங்கள்) இறைத்தூதர் அமுல்படுத்துதல் (பக்கம் 1324) என்று நபிமார்களின்மீது ஏவுகனை வீசியுள்ளார். நபிமார்கள் அல்லாஹ் அல்லாதவர்களின் சட்டங்களை நடைமுறைப்படுத்த முனைவார்களா?

யாகூப்(அலை) அவர்களின் மூலம் கிடைக்கப்பெற்ற சட்டத்தை அமுல்படுத்தும் விதமாக, சகோதரரின் பொதியில் அளவு குவளையை மறைத்து வைத்து; பின்னர் தன்னுடைய சகோதரர்களின் மூலமாகவே அச்சட்டத்தை நடைமுறைப்படுத்தியிருக்க மனிதச்சட்டத்தையும் யூசுஃப்(அலை) அவர்கள் நடைமுறைப்படுத்தினார் என்பது அபாண்டமாகும். மேம் அந்நிய நாட்டவர் விரும்பினால் அவரது நாட்டுச் சட்டத்தின் மூலம் தீர்ப்பளிக்கலாம் (பக்கம் 1324) என்று குறிப்பிட்டுள்ளார். இது ஏற்புடையதா? என்பதை நாம் சிந்திக்க கடமைப்பட்டுள்ளோம்.

யூசுஃப்(அலை) அந்நாட்டில் ஆட்சி அதிகாரத்தை அடைந்தார் என்பதற்கு சான்றாக 12:101 வசனம் உள்ளது **"என் இறைவனே! நிச்சயமாக நீ எனக்கு அரசாட்சியைத் தந்து கனவுகளின் விளக்கத்தையும் எனக்கு கற்றுத் தந்தாய்"** என்று யூசுஃப்(அலை) கூறியதே போதுமாகும். **"இன்னும், அவர் தம் தாய், தந்தையரை அரியாசனத்தின்மீது உயர்த்தி (அமர்த்தி)னார்"** (12:100) என்பதும் சிந்திக்க வேண்டிய வசனமாகும். அதிகாரம் யூசுஃப்(அலை) அவர்களுக்கு கிடைக்கப் பெற்றதற்கு வேறு சான்று தேவையில்லை. யூசுஃப் (அலை) தன் தாய், தந்தையர், சகோதரர்கள் மற்றும் குடும்பத்தினர்களை எகிப்தில் குடி அமர்த்தினார். இவ்வாறே யாகூப் நபியின் சந்ததியினர் (பனீ இஸ்ராயீல்) எகிப்தில் வசிக்க நேரிட்டது. யூசுஃப்(அலை) அவர்களைத் தொடர்ந்து பனீ இஸ்ராயீல்கள் அதிகாரத்திலிருந்தனர். காலப்போக்கில் கிப்தி வம்சத்தினர் (ஃபிர்அவ்ன் சமுதாயத்தினர்) பனீ இஸ்ராயீல்களை அடிமைகளாக்கி அதிகாரத்தை பறித்தனர். அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கவும், கிப்தி வம்சத்தினருக்கும் சேர்த்து நபியாக மூஸா(அலை) அவர்கள் அனுப்பப்பட்டார்கள்.

**"மூஸா தம் சமூகத்தாரை நோக்கி, என் சமூகத்தோரே! அல்லாஹ் உங்கள்மீது புரிந்திருக்கும் அருட்கொடையை நினைத்துப் பாருங்கள்; அவன் உங்களிடையே நபிமார்களை ஏற்படுத்தி உங்களை அரசர்களாகவும், ஆக்கினான்; உலக மக்களில் எவருக்கும் கொடுக்காததை உங்களுக்குக் கொடுத்தான்".**
***அல்குர்ஆன் 5:20***

என்ற வசனம் மேம் வலிசேர்ப்பதாக அமைந்துள்ளது. எனவே யூசுஃப்(அலை) அவர்களைப்பற்றி தவறான கருத்தைக் கொண்டோர் தங்களது வாதத்தை மறுபரிசீலனை செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம். அல்லாஹ் நம் அனைவருக்கும் நேர்வழிகாட்டுவானாக ஆமீன்.

டிசம்பர் 2005 அந்நஜாத்